# பெரம்பலூர் நகராட்சி

**2022 ஆம் ஆண்டு மே மாதம் – 24-ம் நாள் செவ்வாய்கிழமை**

**காலை 11.00 மணிக்கு பெரம்பலூர் நகராட்சி அலுவலகத்தில் நடைபெற்ற அவசரக் கூட்ட நடவடிக்கைகள்**

**தலைமை : நகர் மன்ற தலைவர்**

| மன்ற கூட்டம் நடைபெற்ற நாள் | வரிசை எண் மற்றும் மன்ற கூட்டப்பொருள் | மன்றத்தின் தீர்மானம் |
|---|---|---|
| 24.05.2022 | **பொருள்01:** அரசாணை (நிலை) எண். 52 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நநி–4) துறை நாள்.30.03.2022 மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.40032/2012/ஆர்.1 நாள்.01.04.2022–ன்படி நகர்புற உள்ளாட்சி அமைப்புகளின் வளர்ச்சிக்கு தேவைப்படும் நிதி ஆதாரங்களை கருத்தில் கொண்டு சொத்துவரி மற்றும் காலிமனை வரியினை பொதுவரி சீராய்வு மேற்கொள்ள நகர்மன்ற தீர்மானம் எண். 19, நாள் 11.04.2022–ல் அனுமதி வழங்கப்பட்டது. அதன்படி இந்நகராட்சியில் 01.04.2022 முதல் சொத்துவரி மற்றும் காலிமனைவரி பொதுவரி சீராய்வு மேற்கொள்ள 13.04.2022 –ம் தேதியன்று தினகரன், தினதந்தி ஆகிய தமிழ் நாளிதழ்கள் மற்றும் Trinity Mirror ஆங்கில நாளிதழ் மூலமும், நகராட்சி அலுவலக விளம்பர பலகையின் மூலமும் அறிவிக்கை செய்து விளம்பரப்படுத்தி சொத்துவரி மற்றும் காலிமனைவரி பொதுவரி சீராய்வு குறித்து பொதுமக்கள் மற்றும் சொத்து உரிமையாளர்களிடம் ஆலோசனைகள் மற்றும் ஆட்சேபணைகள் ஏதும் இருப்பின் அதனை அறிவிக்கை வெளியிடப்பட்ட 30 தினங்களுக்குள் (13.04.2022 முதல் 12.05.2022வரை) நேரிடையாகவோ அல்லது எழுத்துமூலமாகவோ அல்லது பெரம்பலூர் நகராட்சி அலுவலக இணையதளத்தின் மூலமாகவோ அனுப்பி வைத்திட கோரப்பட்டதில் 01.04.2022 முதல் திருத்தம் செய்திட உத்தேசிக்கப்பட்டுள்ள மண்டல மதிப்பு மற்றும் 2022–2023 முதலாம் அரையாண்டு முதல் சொத்துவரி, காலிமனைவரி ஆகியவற்றினை பொதுவரி சீராய்வு செய்வது தொடர்பாக பொதுமக்கள் மற்றும் சொத்து உரிமையாளர்களிடமிருந்து ஆட்சேபணைகள், ஆலோசனைகள் ஏதும் வரப்பெறவில்லை. எனவே மேற்காணும் அரசாணை, நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் சுற்றறிற்கை ஆகியவற்றினை தொடர்ந்து இயற்றப்பட்ட இந்நகர்மன்ற தீர்மானம் எண் 19, நாள் 11.04.2022–ன்படி வெளியிடப்பட்ட தினசரி நாளிதழ்கள் மற்றும் இதர விளம்பர அறிவிக்கையின்படி 2022–2023 முதலாம் அரையாண்டில் சொத்துவரி மற்றும் காலிமனைவரியினை பொதுவரி சீராய்வு செய்திடவும், 01.04.2022 முதல் புதிய வரிவிதிப்புகளுக்கு உட்படுத்தப்படும் கட்டிடங்களுக்கு திருத்தியமைக்கப்பட்ட | நகர்மன்றத் தீர்மான எண்.27 அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| | மண்டல அடிப்படையில் வரிவிதிப்பு செய்திடவும் மன்றத்தின் இறுதி ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.<br><br>**<u>அலுவலக குறிப்பு</u>**<br><br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. மேற்படி விபரங்களை மாவட்ட அரசிதழில் வெளியிடவும் அதற்கான செலவினத்தினை நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் அனுமதிக்கலாம்.<br><br>**<u>ந.க.எண்.2523/2022/அ1</u>** | |

**நகர் மன்ற தலைவர்**
**பெரம்பலூர் நகராட்சி**